P.L.RAJ IAS & IPS ACADEMY
Building Bureaucrats Since 2006

# July 12, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. **இந்தியா- நியூஸிலாந்து இருதரப்பு வர்த்தகத்தின் மதிப்பை அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.35,000 கோடியாக (7 பில்லியன் நியூஸிலாந்து டாலர்கள்) அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

   i. இதுதவிர கடல்சார் பாதுகாப்பு, கடற்படை தளவாட ஒத்துழைப்பு, பயங்கரவாத எதிர்ப்பு, விளையாட்டு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் 10 ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. வர்த்தக விரிவாக்கம் உள்பட 8 முக்கிய முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

   ii. நியூஸிலாந்தின் ஆக்லாந்து நகரில் பிரதமர் நரேந்திர மோடி-அந்நாட்டு பிரதமர் கிறிஸ்டோபர் லக்ஸன் இடையே நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்த ஒப்பந்தங்கள்- முடிவுகள் எட்டப்பட்டன.

   iii. இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிக்கும் பின்னணியில், பிராந்திய நாடுகளுடன் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதை நோக்கமாக கொண்டு, இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய மூன்று நாடுகளுக்கான அரசுமுறைப் பயணத்தை பிரதமர் மோடி கடந்த திங்கள்கிழமை தொடங்கினார். இறுதிக்கட்டமாக நியூஸிலாந்தின் ஆக்லாந்து நகரை வந்தடைந்த அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்தப் பயணத்தின் மூலம் கடந்த 40 ஆண்டுகளில் நியூ ஸிலாந்துக்கு வருகை தந்த முதல் இந்திய பிரதமர் என்ற பெருமை மோடிக்கு கிடைத்தது.

   iv. இருதரப்பு பேச்சுவார்த்தை:
      - ஆக்லாந்து நகரில் பிரதமர் மோடி மற்றும் நியூஸிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்ஸன் இரு தரப்பு உயர்நிலைப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.
      - வர்த்தகம், பாதுகாப்பு, விளையாட்டு, கலாசாரம், கல்வி, மக்கள் ரீதியிலான தொடர்புகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உறவை வலுப்படுத்துவது குறித்தும், இந்திய-பசிபிக் பிராந்திய விவகாரங்கள், பரஸ்பர நலன் சார்ந்த சர்வதேச விவகாரங்கள் குறித்தும் விரிவாக ஆலோசித்தனர்.

- கடந்த ஏப்ரலில் கையொப்பமிடப்பட்ட இருதரப்பு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின்கீழ் வர்த்தக செயல்பாடுகள் விரிவாக்கம், அடுத்த 15 ஆண்டுகளில் இந்தியாவில் 20 பில்லியன் அமெரிக்க டாலர்கள் (ரூ.1.91 லட்சம் கோடி) முதலீடு செய்யும் நியூஸிலாந்தின் உறுதிமொழி தொடர்பாக முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

v. 10 ஒப்பந்தங்கள்-8 முக்கிய முடிவுகள்:

- பேச்சுவார்த்தைக்குப் பின்னர், இரு நாடுகளுக்கும் இடையே 10 ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. கடல் சார்பாதுகாப்பு, பேரிடர் மேலாண்மையில் ஒத்துழைப்பு, இரு நாடுகளின் கடற்படைகள் இடையே தளவாட ரீதியிலான ஆதரவு, கடல் பகுதி தரவுகள் பகிர்வு, பேரிடர் மேலாண்மை, கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறையில் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, சுற்றுலா-கலாசாரம் ஊக்குவிப்புக்கான ஒப்பந்தங்கள் அடங்கும்.
- மேலும், இருதரப்பு உறவுகளை உத்திசார் கூட்டுறவு அந்தஸ்துக்கு உயர்த்துதல், இது தொடர்பான 4 ஆண்டு செயல்திட்டம், அடுத்த 5 ஆண்டுகளில் இருதரப்பு வர்த்தக மதிப்பை இரட்டிப்பாக்க அதாவது ரூ.35,000 கோடியாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தற்போது வர்த்தக மதிப்பு ரூ.18,000 கோடியாக உள்ளது. இந்தியாவால் தொடங்கப்பட்ட உலகளாவிய உயிரி எரிபொருள் கூட்டமைப்பில் நியூஸிலாந்து இணைவது உள்ளிட்ட 8 அறிவிப்புகளும் வெளியிடப்பட்டன.

vi. ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம்:

- பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் மோடி, 'இருதரப்பு நல்லுறவை உத்திசார் கூட்டுறவு அந்தஸ்துக்கு உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது. தெளிவான இலக்குகள் மற்றும் உறுதியான தீர்வுகளுடன் ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் எட்டப்படும். கடல்சார் நாடுகளாக நமது நெருங்கிய ஒத்துழைப்பால், இந்திய-பிசிபிக் பிராந்தியத்துக்கு புதிய வலிமை கிடைக்கிறது. அமைதிக்கான இலக்குகளை எட்டநமது உறவுகள் புத்தாற்றலை அளிக்கின்றன என்றார்.

vii. சுதந்திரமான கப்பல் போக்குவரத்து:

- இரு நாடுகள் தரப்பில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: சுதந்திரமான, வெளிப்படையான, வளமான இந்திய-பசிபிக் பிராந்தியத்துக்கான உறுதிப்பாட்டை இரு பிரதமர்களும்

மீண்டும் வலியுறுத்தினர். பிராந்திய இறையாண்மை, ஒருமைப்பாடு, விதிகள் அடிப்படையிலான சர்வதேச ஒழுங்குமுறையைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினர்.

- சர்வதேச சட்டத்துக்கு இணங்க குறிப்பாக கடந்த 1982-ஆம் ஆண்டின் கடல்சார் சட்டங்கள் தொடர்பான ஐ.நா. உடன்படிக்கையின்படி, சுதந்திரமான கப்பல்போக்குவரத்து மற்றும் கடல்சார் சட்டபூர்வ பயன்பாடுகள் உறுதி செய்யப்பட வேண்டும்; ஹோர்முஸ் நீரிணை வழியே சுதந்திரமான கப்பல் குவரத்து மற்றும் வர்த்தக செயல்பாடுகள் முழுமையாக மீட்டெடுக்கப்பட வேண்டும் எனவும், மோதல்களுக்கு அமைதியான-நிலையான தீர்வை எட்ட ராஜீய பேச்சுவார்த்தைகள் மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு இணங்குவதன் முக்கியத்துவத்தையும் இரு தலைவர்களும் வலியுறுத்தினர்.
- உலகளாவிய விநியோகச் சங்கிலி இடையூறுகளால் இந்திய பசிபிக் பிராந்தியம் எதிர் கொண்டுள்ள பாதிப்புகள் குறித்தும், உக்ரைன் போரால் நேரிடும் மனித துயரங்கள் குறித்தும் கவலை தெரிவித்தனர்.

viii. வர்த்தக ஒப்பந்தம் விரைந்து அமல்

- இந்தியா-நியூஸிலாந்து தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை விரைந்து அமல்படுத்துவதற்காக ஒன்றிணைந்து பணியாற்ற இருதரப்பும் தீர்மானித்துள்ளன. இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு, தகவல் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் வகையில், கடல்சார் பாதுகாப்பு குறித்த பேச்சுவார்த்தை வழிமுறையை நிறுவவும் ஒப்புக்கொள்ளப்பட்டதாக கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியா-நியூஸிலாந்து இடையே கடந்த ஏப்ரலில் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. அதன்படி, இந்திய ஏற்றுமதி பொருள்களுக்கு 100 சதவீத வரியில்லாத அணுகல், நியூஸிலாந்தின் 95 சதவீத இறக்குமதிகளுக்கு வரி விலக்கு அல்லது குறைப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ix. விளையாட்டுத் துறையில் ஒத்துழைப்பு

- ஆக்லாந்து நகரில் விளையாட்டுத் துறை புத்தாக்க கண்காட்சியை நியூஸிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்ஸனுடன் இணைந்து பிரதமர் மோடி பார்வையிட்டார். கண்காட்சியில் இடம்பெற்ற புத்தாக்க விளையாட்டு உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து

அந்நாட்டின் முன்னணி விளையாட்டு வீரர்கள் மற்றும் நட்சத்திரங்கள், பிரதமர் மோடிக்கு செயல்முறை விளக்கமளித்தனர்.

- கிரிக்கெட்டை தாண்டி விளையாட்டுத் துறையில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் கூட்டுச் செயல்திட்ட ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் கையொப்பமிட்டுள்ள நிலையில், 'இந்தியா-நியூஸிலாந்து இடையே விளையாட்டுத் துறை எப்போதுமே வலுவான பாலமாக விளங்குகிறது. நிகழாண்டு நமது விளையாட்டுத் துறை உறவுகளின் 100-ஆவது ஆண்டைக் குறிக்கிறது' என்று பிரதமர் மோடி பதிவிட்டார்.
- 2030-இல் காமன்வெல்த் போட்டிகளை நடத்த இந்தியா தயாராகிவரும் நிலையில், மேற்கண்ட ஒப்பந்தம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

**2. தமிழ்நாட்டில் கனிமத் தட்டுப்பாடு ஏற்படும் போது அவற்றை வெளிமாநிலங்களுக்கு கொண்டு செல்வதற்கு தற்காலிக தடை விதிக்க சுரங்கம் மற்றும் புவியியல் துறை இயக்குநருக்கு அதிகாரத்தை தமிழக அரசு அளித்து அரசாணை பிறப்பித்துள்ளது.**

i. கட்டுமானப் பயன்பாட்டுக்காக தமிழ்நாட்டில் இருந்து அண்டை மாநிலங்களுக்கு எம்-சாண்ட் உள்ளிட்ட கனிமப் பொருள்கள் கொண்டு செல்லப்படுகின்றன. இதை ஒழுங்குமுறைப்படுத்த புதிதாக பதவியேற்ற தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ii. இந்நிலையில், தமிழ்நாடு சட்டவிரோத சுரங்கம், போக்குவரத்து,சேமிப்பு மற்றும் கனிம விற்பனையாளர் விதிகள், 2011-இல் திருத்தம் மேற்கொண்டு தமிழக அரசு அரசிதழில் வெளியிட்டுள்ளது. அதன்படி, செயற்கை மணல் (எம்-சாண்ட்) கருங்கற்கள், பெரிய கல் துண்டுகள், பாறாங்கற்கள், ஜல்லிக்கற்கள், அரைவைக் கற்கள், கைக்கல் அரைவை என அனைத்து வகையான கட்டுமான கற்கள் ஆகியவை தமிழ்நாட்டுக்கு தேவையான அளவு கிடைப்பதை உறுதி செய்வதற்காக, பிற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்ல தற்காலிக தடை விதிக்கும் அதிகாரம் சுரங்கம் மற்றும் புவியியல் துறை இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3. புகழ் பெற்ற பின்னணிப் பாடகியான எஸ்.ஜானகி (88) சனிக்கிழமை (ஜூலை 11) காலமானார்.**

- தென்னிந்திய குயில் என்றழைக்கப்பட்ட ஜானகி, தமிழ், தெலுங்கு, மலையாளம் எனப் பல மொழிகளில் 48,000-க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார்.

**4. தமிழ்நாடு தினம் ஆண்டுதோறும் ஜூலை 18-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.**

**5. ஜப்பான் மற்றும் தைவான் தீவுகளில் சூறாவளி காற்றுடன் பலத்த மழையை ஏற்படுத்திய 'பவி' புயல், கிழக்கு சீனாவைத் தாக்கியதால் அங்கு முன்னெச்சரிக்கையாக சுமார் 17 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.**

i. சீனாவில் கிழக்கு கடலோர மாகாணமான செஜியாங்கில் இப்புயல் கரையைக் கடக்கத் தொடங்கியது. செஜியாங் மட்டுமின்றி ஃபுஜியான் மாகாணத்திலும் புயலின் தாக்கம் கடுமையாக இருக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

ii. இதனால், 'ஆரஞ்சு' நிற புயல் எச்சரிக்கையும், இந்த ஆண்டின் முதல் சிவப்பு நிற பலத்த மழை எச்சரிக்கை யும் விடுக்கப்பட்டுள்ளது. மேலும், பேரிடர் மீட்புப் பணிகளுக்காக அர சின் நிதியிலிருந்து 4 கோடியுவான் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், ஆயிரக்கணக்கான மீட்புப் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

iii. புயலின் பாதிப்புகள் இதுவரை...:

- பவி புயல் தைவான் நாட்டின் வடக்குப் பகுதியைக் கடந்து சென்றபோது அதிகபட்சமாக மணிக்கு 144 கி.மீ. வேகத்தில் வீசிய சூறாவளிக் காற்றில் சிக்கி 113 பேர் காயமடைந்தனர். ஹுவாலியன் மற்றும் தைச்சுங் உள்ளிட்ட பல நகரங்களில் இருந்து 14,200-க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.
- தெற்கு ஜப்பானின் ஒகினாவா, இஷிகாகி ஆகிய பகுதிகளிலும் பவி புயல் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. கடல் அலைகள் அதிக சீற்றத்துடன் காணப்பட்டது. 200-க்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்துசெய்யப்பட்டன.
- பவி புயல் தீவிரமடைவதற்கு முன்பு பிலிப்பின்ஸ் நாட்டில் பெய்த தொடர் பருவமழை மற்றும் நிலச்ச ரிவில் சிக்கி 17 பேர் உயிரிழந்தனர். தொடர்

மழை மற்றும் புயல் அச்சம் காரணமாக சுமார் 11,000-க்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி, முகாம்களில் தஞ்சமடைந்தனர்.

6. **பிஃபா உலகக் கோப்பை கால்பந்து போட்டி இறுதி ஆட்டம் நியூ ஜெர்ஸியின் மெட்லைப் மைதானத்தில் ஜூலை 20-இல் நடை பெறவுள்ளது.**

7. **எதிர்காலப் போர்களில் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினாலும், வெற்றியைத் தீர்மானிப்பதில் நன்கு பயிற்சி பெற்ற ராணுவ வீரர்களின் பங்கே முக்கியமானதாக இருக்கும் என பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.**

   i. ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட போர்க்கப்பலான 'ஐஎன்எஸ் மகேந்திரகிரியை' இந்திய கடற்படையின் கிழக்குப் படைப் பிரிவுக்கு அமைச்சர் ராஜ் நாத்சிங் அர்ப்பணித்தார்.

   ii. 6,670 டன்கள் எடை கொண்ட இந்தப் போர்க் கப்பல் அதிகபட்சமாக 28 கடல்மைல் வேகத்தில் பயணிக்கும் திறன் கொண்டது. ரேடார் கருவிகளால் எளிதில் கண்டுபிடிக்க முடியாத வகையிலான இந்தப் போர்க் கப்பலை மசாகான்டாக் கப்பல் கட்டுமான நிறுவனம் கட்டமைத்துள்ளது. பிரமோஸ் ஏவுகணை உள்பட அதிக வேக மற்றும் தாக்குதல் திறன் கொண்ட ஏவுகணைகளை ஐஎன்எஸ் மகேந்திரகிரியில் பொருத்த முடியும்.

8. **ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் மீண்டும் நிரந்தரமல்லாத உறுப்பினராக தேர்வாக பிற நாடுகளிடம் ஆதரவு கோரும் அதிகாரபூர்வ பிரசாரத்தை நியூயார்க்கில் அடுத்த வாரம் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தொடங்கிவைக்கிறார்.**

   i. ஏற்கெனவே, 2020–2021 கால கட்டத்தில் ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தரமல்லாத உறுப்பினராக இந்தியா இருந்த நிலையில் 2028–29 காலத்துக்கான தேர்தல் 2027 ஜூன் மாதம் நடைபெறவுள்ளது. ஆசிய-பசிபிக் குழும நாடுகள் பிரிவில் ஒரே யொரு உறுப்பினர் பதவிக்கு மட்டுமே நடைபெறும் இந்தத் தேர்தலில் இந்தியாவும் தஜிகிஸ்தானும் போட்டியிடுகிறது.

ii. ரஷிய-உக்ரைன் போர், இஸ்ரேல்-காஸா மற்றும் அமெரிக்கா-ஈரான் இடையே நிகழ்ந்து வரும் கடும் மோதல்களால் சர்வதேச புவிஅரசியல் சூழலில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தச் சூழலில் ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர மல்லாத உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட இந்தியா தீவிர முயற்சிகளை செய்து வருகிறது.

iii. இதன் தொடக்கமாக ஜூலை 5-ஆம் தேதி முதல் ஜூலை 10– ஆம் தேதி வரையிலான பஹ்ரைன், கத்தார் மற்றும் குவைத் சுற்றுப்பயணத்தை முடித்து விட்டு அமெரிக்காவுக்குச் செல்லும் ஜெய்சங்கர் நியூயார்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் திங்கள்கிழமை (ஜூலை 13) நடைபெறும் சிறப்பு நிகழ்வில் அதிகாரபூர்வ பிரசாரத்தை தொடங்கவுள்ளார். அப்போது ஐ.நா.பொதுச்செயலர் அன்டோனியோ குட்டெரெஸை அவர் சந்திக்கவுள்ளார்.

iv. அதைத் தொடர்ந்து பெல்ஜியம் தலைநகர் பிரஸெல்ஸில் ஜூலை 14, 15 ஆகிய தேதிகளில் நடைபெறும் 3-ஆவது இந்தியா-ஐரோப்பிய ஒன்றியவர்த்தக மற்றும் தொழில்நுட்ப கவுன்சில் கூட்டத்தில் அவர் பங்கேற்கிறார்.

v. ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் நிரந்தரமல்லாத உறுப்பினருக்கான தேர்தலில் 'அமைதி, கோள், முன்னேற்றம்' என்ற கருப்பொருளில் இந்தியா பிரசாரத்தை முன்னெடுக்கவுள்ளது. இதை குறிப்பிடும் வகையில் அண்மையில் இந்தோனேசியா நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, 'சர்வதேச புவிஅரசியல் பல மாற்றங்களைச் சந்தித்து வரும் இந்த இக்கட்டான சூழலில் உலக விவகாரங்களில் நம்மைப் போன்ற வளர்ந்து வரும் நாடுகள் சம வாய்ப்பு மற்றும் பெரும் பங்களிப்பை கோர வேண்டும். அந்த வகையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் எவ்வித தாமதமுமின்றி சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்' என்றார்.

vi. நிரந்தரமல்லாத ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர்களாக அமெரிக்கா, சீனா, ரஷியா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய 5 நாடுகள் மட்டுமே உள்ளன. 10 உறுப்பு நாடுகள் சுழற்சி முறையில் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இந்த இரு உறுப்பினர்கள் பிரிவிலும் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளவும் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்தை தங்களுக்கு வழங்க வேண்டும் எனவும் இந்தியா நீண்டகாலமாக கோரிக்கை வைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

9. **இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது கூடுதலாக 12.5 சதவீத வரியை விதிக்க சமர்ப்பித்துள்ள பரிந்துரையை அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி அலுவலகம் (யுஎஸ்டிஆர்) மறுபரிசீலனை செய்ய வேண்டும்' என்று இந்தியா தரப்பில் வலியுறுத்தப்பட்டது.**

i. மேலும், 'வர்த்தகம் தொடர்பான சச்சரவுகளுக்கு இது போன்ற ஒருதலைபட்சமான நடவடிக்கைகள் மூலமாக அல்லாமல், இருதரப்பு வர்த்தகப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும்' என்றும் இந்தியா வலியுறுத்தியது.

ii. இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் மீது அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்த பரஸ்பர வரி விதிப்பு செல்லாது என்று அமெரிக்க உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து, இந்தியா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட வர்த்தக கூட்டுறவு நாடுகளின் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகள் அமெரிக்க உற்பத்தியை எந்த அளவுக்குப் பாதித்துள்ளது என்பதைக் கண்டறியும் நோக்கில் அமெரிக்க வர்த்தகச் சட்டம் 1974-இன் பிரிவு 301-இன் கீழ் யுஎஸ்டிஆர் மூலம் புதிய விசாரணைக்கு அமெரிக்கா உத்தரவிட்டது.

iii. அதன்படி தீவிர ஆய்வு மேற்கொண்ட யுஎஸ்டிஆர் பிரதிநிதி ஜேமிஸன் க்ரீயர், அண்மையில் தனது பரிந்துரையைச் சமர்ப்பித்தார். அதில் இந்தியா உள்பட 54 நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது கூடுதலாக 12.5 சதவீத வரியை விதிக்க பரிந்துரைத்தார்.

iv. பிற நாடுகளில் தங்கள் விருப்பத்துக்கு மாறாக தொழிலாளர்களைக் கட்டாயம் பணிபுரிய வைத்து தயாரிக்கப்படும் பொருள்கள், அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடுக்கும் விதிமுறைகளைச் சுட்டிக்காட்டி, இந்த வரியை விதிக்கப் பரிந்துரைக்கப்பட்டது. இந்த விதிமுறைகளின் கீழ், இந்தியாவுடன் சேர்த்து மொத்தம் 54 நாடுகள் மீது இந்த வரியை விதிக்க பரிந்துரைக்கப்பட்டது.

v. இந்த நடவடிக்கையில், முதல் கட்டமாக கூடுதல் வரிவிதிப்பு பரிந்துரை தொடர்பான விசாரணையை 54 நாடுகளிடமும் யுஎஸ்டிஆர் மேற்கொண்டு வருகிறது. வாஷிங்டனில் கடந்த 8- ஆம் தேதி நடைபெற்ற விசாரணையின்போது, இந்தியா சார்பில், மத்திய வர்த்தக அமைச்சக இணைச் செயலர் பிரிஜ் மோகன் மிஸ்ரா ஆஜராகி இந்தியா சார்பில் வாதத்தை முன்வைத்தார்.

vi. கூடுதல் வரி விதிப்பு பரிந்துரைக்கு எதிராக இந்தியா தரப்பில்

சமர்ப்பிக்கப்பட்ட எழுத்து பூர்வ ஆட்சேபத்தை யுஎஸ்டிஆர் தனது வலைதளத்தில் வெளியிட்டது. அதில் இந்தியா தரப்பில் கூறப்பட்டிருப்ப தாவது:

- யுஎஸ்டிஆர்-இன் நடவடிக்கை, அமெரிக்க வர்த்தக சட்டத்தின் பிரிவு 301(டி)-இன் கீழ் உள்ள தொடர்புடைய சட்டத் தரநிலைகளை பூர்த்தி செய்யவில்லை. வெறும் கட்டாய உழைப்பு சார்ந்த இறக்குமதி தடையை மேற்கொள்ளாததை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பிரிவு 301- இன் கீழ் நியாயமற்ற நடைமுறையாகக் கருத முடியாது. மேலும், பிற சட்டபூர்வ நடைமுறைகள் மீறப்பட்டதற்கான எந்தவொரு ஆதாரமும் யுஎஸ்டிஆர் சார்பில் முன்வைக்கப்பட வில்லை.
- மேலும், ஒரு சில நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகள் மற்றும் பொதுவான வர்த்தகப் போக்குகளின் அடிப்படையில் இந்த முடிவை யுஎஸ்டிஆர் எடுத்திருப்பது தெரிகிறது.
- கட்டாய உழைப்புடன் தொடர்புடைய இறக்குமதிகள் தொடர்புடைய குறிப்பிட்ட துறை அல்லது நாடு சார்ந்த ஆதாரங்களைச் சமர்ப்பிக்காமலே, அத்தகைய பொருள்கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாக அனுமானத்தின் அடிப்படையில் யுஎஸ்டிஆர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
- மேலும், கட்டாய உழைப்பு சார்ந்த உற்பத்தியை ஒழிப்பதை, தனது அரசமைப்புச் சட்ட கடமையாகவும், சர்வதேச சட்டம் மற்றும் கோட்பாடு சார்ந்த விவகாரமாகவும் இந்தியா கருதுகிறது. அந்த வகையில், போதிய ஆதாரங்கள் ஏதுமின்றி இந்தியா உள்பட 54 நாடுகளை முறையற்ற வகையில் ஒரு பிரிவின் கீழ் யுஎஸ்டிஆர் வகைப்படுத்தியுள்ளது.
- வர்த்தகம் தொடர்பான சச்சரவுகளுக்கு இதுபோன்ற ஒரு தலைபட்சமான நடவடிக்கைகள் மூலமாக அல்லாமல், இருதரப்பு வர்த்தகப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும். அவ்வாறு, குறிப்பிட்ட குறைகள் இருந்தால், அவற்றுக்குப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதில் ஆக்கபூர்வமாக ஈடுபட இந்தியா தொடர்ந்து தயாராக உள்ளது.
- எனவே, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது கூடுதலாக 12.5 சதவீத வரியை விதிக்க சமர்ப்பித்துள்ள பரிந்துரையை அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி அலுவலகம் (யுஎஸ்டிஆர்) மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்தியா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.